
தாய்மொழி - தமிழ்

# எழுத்துப் பிழைகள் சொல் இடைவெளி நிறுத்தக் குறிகள்



121114

ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| பாடப்பதிப்பாசிரியர்கள் | எம். எம். மன்சூர் |
| | ம. செ. அலெக்ஸ்சாந்தர் |
| | சி. புலேந்திரன் |
| | சி. குமாரசாமி |
| | வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) |
| | கே. நடேசன் |
| தளக்கோலம் | எஸ். எம். ஆர். சுநீன் |
| | ஹேமஜித் மகிந்தரத்ன |
| | ஏ. சிவராசா |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ |
| | ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி. எஸ். டி. லயனல் அமரகுணசேகர |

I. puspalatha

# எழுத்துப் பிழைகள்
# சொல் இடைவெளி
# நிறுத்தக் குறிகள்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| தாய் மொழி - தமிழ் | 1211 |
| எழுத்துப் பிழைகள் சொல்லிடைவெளி | |
| நிறுத்தக் குறிகள் | 121114 |

உள்ளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் . . . . . . . . . . 3
1.0 குறிக்கோள்கள் . . . . . . . . . . 3
2.0 முற்சோதனை . . . . . . . . . . 3

பகுதி I

3.0 எழுத்துப் பிழைகள் . . . . . . . . . . 5

பகுதி II

4.0 சொல்லிடை வெளி . . . . . . . . . . 11

பகுதி III

5.0 நிறுத்தக் குறிகள் . . . . . . . . . . 15
6.0 பொழிப்பு . . . . . . . . . . 23
7.0 பிற்சோதனை . . . . . . . . . . 23
8.0 ஒப்படை . . . . . . . . . . 24
9.0 விடைகள் . . . . . . . . . . 26


©1990 தேசியக் கல்வி நிறுவகம்

பதிப்பு 1:2

## 0.0 அறிமுகம்

மொழியை எழுத்தில் வடிக்கும்போது பயிற்சி காரண மாக வரும் எழுத்தாற்றல் முக்கிய இடத்தைப் பெறு கின்றது. அவ்வெழுத்தாற்றலை எழுத்துப் பிழையின்றி எழுதுதல், சொல்லிடைவெளி விடுதல், வேண்டிய குறி யீடுகளை இடுதல் ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆராயலாம். சிறந்த முறையிற் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு இவ்வெழுத்தாற்றல் இன்றியமையாத தாகும். இந்த மொடியூல் எழுத்துப் பயிற்சிக்கேற்ற ஒரு வழிகாட்டியாகவும் அமையும்.

## 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக் கற்பதால் பின்வரும் குறிக்கோள் களை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

★ எழுத்துப் பிழையின்றி எழுத அறிந்து கொள் ளுதல்.

★ சொல்லிடைவெளியை வேண்டிய இடங்களில் விடுதல்.

★ வேண்டிய இடங்களில் உரிய குறியீடுகளை அமைத்தல்.

★ எழுத்துப் பிழையின்மை, சொல்லிடைவெளி, நிறுத்தக் குறியீடுகள் என்பவற்றின் முக்கியத் துவத்தையும், பயன்பாட்டையும் உணர்தல்.

## 2.0 முற்சோதனை

கீழே கொடுக்கப்பட்டிருப்பது ஒரு பரீட்சையில் மாண வர்களுக்குக் கொடுக்கப்பட்ட வினுத்தாளின் ஒரு பகுதி யாகும். வினுக்களுக்கு விடையெழுதி எழுத்துப் பிழை, சொல்லிடைவெளி, நிறுத்தக் குறியீடுகள் பற்றிய உங் கள் அறிவை மட்டிடுக.

1. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் எழுத்துப் பிழையுள்ள பத்துச் சொற்கள் உள்ளன. அவற் றைக் கண்டறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் வரிசையாக எழுதி, அவற்றின் திருத்தமான வடிவங்களையும் அவ்வட்டவணையிற் பூரணப்படுத்துக.

கைமாறு கருதாது இரப்பவருக்குப் பொருளை வாரி வழங்கியவர்கள் வள்ளல்கள் என்று போற்றப்படுகின்றனர். அத்தகைய வள்ளல் கள் வரிசையிலே பாரி என்னும் குறுநில மன்னனும் இடம் பெறுகின்றுன்.

| பிழையான சொல் | திருத்திய சொல் |
|---|---|
| 1. ...................... | ...................... |
| 2. ...................... | ...................... |
| 3. ...................... | ...................... |
| 4. ...................... | ...................... |
| 5. ...................... | ...................... |
| 6. ...................... | ...................... |
| 7. ...................... | ...................... |
| 8. ...................... | ...................... |
| 9. ...................... | ...................... |
| 10. ...................... | ...................... |

2. ஒரே பந்தி (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பகுதிகளிலும் ஒரு சில வேறுபாடுகளுடன் தரப்பட்டுள்ளது. அவற்றை வாசித்துப் பார்த்து இலகுவாகப் பொருள் விளங்கக் கூடியதாக உள்ள பந்தி எதுவென அறிந்து அதற்குரிய குறியீட்டெழுத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அடைப்புக் குறிக்குள் இடுக.

(அ) வேந்தே இன்று நடந்த சூதைஎன்னென்பது யாம் நாராயணனைக் கோட்டைக்குக் காவலனாக அமைத்தோம். அவனுடன் எண்ணாயிரம் வீரரையும் அனுப்பினோம். ஆனால் பயன் என்வீரரும் அவனும் என்மீது கொண்ட பகைமையினால் அரணைக்காவாது ஒழிந்தனர். வேலியே பயிரை மேய்ந்தால் என் செய்வது என்று குடிலன் முதலைக் கண்ணீர் வடித்தான்.

(ஆ) வேந்தே இன்று நடந்த சூதை என்னென்பது யாம் நாராயணனைக் கோட்டைக்குக் காவலனாக அமைத்தோம் அவனுடன் எண்ணாயிரம் வீரரையும் அனுப்பினோம். ஆனால் பயன் என் வீரரும் அவனும் என்மீது கொண்ட பகைமையினால் அரணைக் காவாது ஒழிந்தனர். வேலியே பயிரை மேய்ந்தால் என் செய்வது என்று குடிலன் முதலைக் கண்ணீர் வடித்தான்.

(இ) வேந்தே, இன்று நடந்த சூதை என்னென்பது? யாம் நாராயணனைக் கோட்டைக்குக் காவலனாக அமைத்தோம்; அவனுடன் எண்ணாயிரம் வீரரையும் அனுப்பினோம்; ஆனால், பயன் என்? வீரரும் அவனும் என்மீது

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

கொண்ட பகைமையினால் அரணைக் காவாது ஒழிந்தனர்; 'வேலியே பயிரை மேய்ந்தால்' என் செய்வது?'' என்று குடிலன் முதலைக் கண்ணீர் வடித்தான்.

(..............)

## பகுதி 1

எழுத்துப் பிழை, சொற்பிழை இன்றி எழுதுவதற்கு மொழியறிவு பெரிதும் வேண்டப்படுகின்றது. மொழியைப் பயன்படுத்தும் பயிற்சி காரணமாகவே அத்தகைய ஆற்றலை ஒருவர் பெறமுடியும். பகுதி 1 ஐக் கற்பதன் மூலம் பிழையின்றி எழுதும் பயிற்சியை நீங்கள் பெற முடியும்.

## 3.0 எழுத்துப் பிழைகள்

எழுத்துக்கள் சேர்ந்து சொற்கள் உருவாகின்றன என நாங்கள் முன்னர் கற்றோம். எழுதும்போது நாம்விடும் எழுத்துப் பிழை கருத்து வேறுபாட்டை உருவாக்கிவிடும். அன்றியும் பிழையான எழுத்தொன்றை எழுதுவதால் அவ்வாக்கியம் கருத்தற்றதாக மாறிவிடவுங் கூடும். எதிர் பார்த்த கருத்தைத் தராது மாறான விளைவையும் ஏற்படுத்தலாம். ஒரு வாக்கியம் பொருளை நன்கு புலப்படுத்த வேண்டுமாயின் எழுத்துப்பிழை இடம் பெறலாகாது என்பது இதனாற் புலனாகின்றது. எழுத்துப் பிழைகள் என்ற இவ்வத்தியாயத்தில் நாம் கற்க வேண்டிய விடயங்களை, கற்கும் வசதிக்காகப் பின் வரும் நான்கு பிரிவுகளில் ஆராய்வோம்.

1 ணகர, னகர வேறுபாடு
2 ரகர, றகர வேறுபாடு
3 லகர, ழகர, ளகர வேறுபாடு
4 ஷ், ஸ், ஜ், ஷ, உற் இடம் பெறும் சொற்கள்

இவற்றுள் முதலில் ணகர, னகர வேறுபாடு பற்றி நோக்குவோம். ணகரம் டகரத்திற்கு இனமான மெல்லெழுத்தாகும். ஆராய்ச்சியாளர் இதை வல்லண்ண ஒலி என்பர். ந, ன என்பன தாழ்ஒலியாக ஒலிக்க ண உயர் ஒலியாக ஒலிக்கின்றது. னகரம் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்தாகும். சிறப்பெழுத்தாகிய றகரத்திற்கு அது இன எழுத்தாகும். ன, ந என்பன சில இடங்களில் ஒரே மாதிரியும் ஒலிக்கின்றன.

| | | |
|---|---|---|
| சந்நியாசி | - | சன்னியாசி |
| அந்நியர் | – | அன்னியர் |
| மெய்வல்லுநர் | – | மெய்வல்லுனர் |

என வருமிடங்களில் ன, ந என்பன ஒத்த ஒலியுடையன வாக ஒலிப்பதைக் காணலாம். எனினும் ன, ந என்பன மாறுபட்டு ஒலிக்கும் இடங்களுமுண்டு. பநது என்பதை பன்து எனவும், வந்தான் என்பதை வன்தான் எனவும் ஒலிக்க முடியாது. நகர மெய் தனக்கினமான தகரத் துடன் சேர்ந்தொலிக்கும்போதே இவ்வேறுபாடு ஒலி யில் ஏற்படுவதை அவதானிக்கலாம்.

உதாரணம்: பந்தயம், வெந்தது, தந்தான், வீழ்ந்தான் முந்நூறு, முன்னூறு என்னும் சொற்கள் ஒலிக்கும் போது வேறுபாடு இல்லாவிடினும். பொருள் வேறு பாடுடையனவாக விளங்குவதைக் காணலாம்.

- முன்னூறு ரூபா தந்தான் என்பது முன் நூறு ரூபா தந்தான் எனப் பொருள் படும்.
- முந்நூறு ரூபா தந்தான் என்பது (மூன்று + நூறு) 300 ரூபா தந்தான் எனப் பொருள் வேறுபடும்.

ண, ன என்பன முறையே உயர் ஒலியாகவும், தாழ் ஒலியாகவும் ஒலிப்பன என முன்னர் கற்றோம். அவை ஒலிவேறுபாட்டுடன் பொருள் வேறுபடும் தருவன ஆதலின் அவற்றைச் சரியாக ஒலிக்கவும் பிழையின்றி எழுதவும் மாணவர்கள் பயின்று கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1 வேட்டுவக் கன்னியர் **கண்ணி** வைத்துப் பறவை களைப் பிடிப்பர்.

2 **பனம்** பொருட்களை விற்றுப் **பணம்** சம்பாதித் தான்

3 **பேன்** இல்லாது தலையைப் **பேண** வேண்டும்.

**செவ்வைபார்த்தல் 1**

பின்வரும் சோடிச் சொற்களுள் சரியான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1 அருச்சுனன் (கணை | கனை) தொடுத்தான்.

2 குதிரை (கனைத்தது | கணைத்தது).

3 சோதிடர் சுபவேளையைக் (கணித்தார் | கனித் தார்).

4 (கனி | கணி) பறிக்கச் சிறுவர் மரத்திலேறினர்.

5 அவனது (மனம் | மணம்) நாணியது.

6 (மணம் | மனம்) தரு மலர்களைப் பறித்து வந் தாள்.

7 ஒரு (கணம் | கனம்) அவள் தடுமாறினாள்.

8 மகா (கணம் | கனம்) தங்கிய மந்திரி அவர்களால் நாட்டப்பட்டது.

9 மிருகங்களில் (உண்ணி | உன்னி) பிடித்தால் தொற்று நீக்கி உபயோகித்தல் வேண்டும்.

10 பதில் கூற (உண்ணினான் | உன்னினான்).

11 இராமன் பதினான்காண்டு (கானில் | காணில்) வசித்தான்.

12 தவறு (காணில் | கானில்) உடனே திருத்துதல் நன்று.

13 தாய்நாட்டு (மன் | மண்) காக்க வீரர் போரிட்டனர்

14 ''(மன்னும் | மண்ணும்) இமயமலை எங்கள் மலையே''

15 (எண்ணிய | என்னிய) எண்ணியாங்கு எய்துக.

16 மழை (மானி | மாணி) கொண்டு மழைவீழ்ச்சியை அளந்தனர்.

17 (காணலை | கானலை) நீர் என எண்ணி மான் ஓடியது.

18 (புணர்ச்சியில் | புனர்ச்சியில்) ணகரம் டகரமாகத் திரியும்.

19 (விண்ணவர் | வின்னவர்) அமுதமும் வேண்டேன்.

20 (கண்ணன் | கன்னன்) தன் மகன் எனக் குந்தி கூறினான்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

**ரகர, றகர வேறுபாடு**

நாங்கள் இதுவரை ணகர, னகர வேறுபாடு பற்றிக் கற்றோம். இப்பந்தியில் ரகர, றகர வேறுபாடு பற்றி அறிந்து கொள்வோம்.

எழுத்துக்கள் பிறப்பதற்கு நா, இதழ், பல், அண்ணம், என்பவற்றின் முயற்சி வேண்டப்படுகின்றது. எழுத்துக்களின் பிறப்பும் முயற்சியும் பற்றித் தொல்காப்பியரும், நன்னூலாளரும் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

'அண்ணம் நுனிநா வருட ரழவரும்,
அண்ணம் நுனிநா நனியுற றனவரும்,

என நன்னூலாளர் கூறுகின்றார்.

ர, ற என்பவற்றின் பிறப்புக்கு அண்ணம், நுனிநா என்பவற்றின் முயற்சியே தேவை. அண்ணத்தை நுனி நா யெல்லத் தடவ ரகரமும், அண்ணத்தை நுனிநா நன்கு அழுத்த றகரமும் பிறக்கும் என்பது அவர்காட்டும் வேறுபாடாகும்.

மெய்யெழுத்துக்கு அயலில் மெய் எழுத்து வருதல் மெய்ம் மயக்கம் எனப்படும். ரகரம் தன்னோடு தான் மயங்காது; பிறமெய்களுடனேயே மயங்கும். சார்பு, பார்த்து எனவும் சேர்ந்தான், கூர்ங்கணை எனவும், சோர்பு, போர்யானை எனவும் மூவின மெய்களோடும் ரகரம் மயங்கி வருதல் காண்க.

றகரம் தன்னோடு தான் மயங்கும், பிற மெய்களோடும் மயங்கும். குற்றம், நற்றாள் — தன்னோடு தான் மயங்கியது. (உடனிலை) கற்பு, பொற்சிலை — பிற மெய்களோடு மயங்கியது. (வேற்றுநிலை) றகர ஒன்றின் பின் றகரம் வரும்போது ரகறம் போலவே ஒலிக்கிறது. உ — ம் : குற்றம், குற்ரம் எனவே ஒலிக்கிறது. இதனால் மாணவர்கள் எழுத்துப் பிழைவிட வாய்ப்பேற்படுகின்றது. றகரமெய்யின் பின் ரகரம் வரமாட்டாது என்பதை நன்கு மனத்திற் பதித்துக் கொண்டால், அப் பிழையை என்றும் தவிர்க்கலாம்.

**செவ்வை பார்த்தல் 2**

ரகர, றகர பேதம் பற்றி நீர் அறிந்தவற்றை மட்டிடக் கீழே கொடுத்துள்ள செவ்வை பார்த்தற் பயிற்சி பயனளிக்கும். அடைப்புக் குறிக்குள் எழுதப்பட்டிருக்கும் சரியான கருத்தமைந்த சொல்லின் கீழ்க் கோடிடுக.

1 ( அரம் / அறம் ) செய விரும்பு.

2 வாள் கொண்டு மரம் ( அரிந்தான் / அறிந்தான் )

3 ஏழையின் துயர் கண்டு ( இறங்கினன் / இரங்கினன் )

4 வானத்தில் இருந்த விமானம் கீழே ( இறங்கியது / இரங்கியது )

5 விளைவயல் எங்கும் ( பரந்து / பறந்து ) காணப்பட்டது.

6 காகம் இரை தேடி எங்கும் ( பரந்து / பறந்து ) திரிந்தது.

7 முள் ( முருக்கு / முறுக்கு ) நட்டான்.

8 பாட்டி ( முருக்கு / முறுக்கு ) சுட்டாள்

9 அம்மா பால் ( கரந்தாள் / கறந்தாள் )

10 கள்வர் ( கரந்து / கறந்து ) உறையும் இடங்களை நகர்காவலர் முற்றுகையிட்டனர்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

**லகர, ழகர, ளகர வேறுபாடு**

மாணவர் இவ்வெழுத்துக்கள் இடம் பெறும் சொற்களைச் சரியாக உச்சரிப்பதிலும், பிழையின்றி எழுதுவதிலும் பெரிதும் இடர்ப்படுகின்றனர். வாசிப்புப் பயிற்சியை வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் பொருள் வேறுபாடறிந்து பிழையுற எழுதும் ஆற்றலை மாணவர் பெறமுடியும். கீழே கொடுக்கப்பட்டுள்ளது போன்று சொற்கூட்டங்களை அறிமுகம் செய்தல் ஓரளவுக்கு எழுத்துப் பிழைகளை நீக்கத் துணைபுரியும்.

| | பிழை | | சரி |
|---|---|---|---|
| 1 | பளம் | — | பழம் |
| 2 | குழம் | — | குளம் |
| 3 | வீட்சி | — | வீழ்ச்சி |
| 4 | ஆள்ச்சி | — | ஆட்சி |
| 5 | மொலி | — | மொழி |
| 6 | நழ்ழிரவு | — | நள்ளிரவு |
| 7 | தாள்த்தினன் | — | தாழ்த்தினன் |
| 8 | பால்க்குடம் | — | பாற்குடம் |
| 9 | நள்வாழ்த்து | — | நல்வாழ்த்து |
| 10 | பல்லிக்கூடம் | — | பள்ளிக்கூடம் |

அடிச் சொற்களையும் புணர்ச்சி விதிகளையும் நன்கறிவதன் மூலம் இத்தகைய பிழைகளை இனங்கண்டு திருந்த முடியும்.

**ஷ், ஸ், ஜ், க்ஷ, ஹ இடம் பெறும் சொற்கள்**

ஷ் வரும் இடங்களில் ட் இடுதல் வேண்டும். வேஷம் என்பதை வேடம் எனவும் விஷம் என்பதை விடம் எனவும் கஷ்டம் என்பதைக் கட்டம் எனவும் எழுதலாம்.

'ஸ்' வரும் இடங்களில் 'த்' இடுதல் வேண்டும். புஸ்தகம் என்பதைப் புத்தகம் எனவும். அஸ்திரம் என்பதை அத்திரம் எனவும் எழுதலாம். புஸ்த்தகம் என 'ஸ்' உடன் 'த்' சேர்த்து எழுதுதல் தவறாகும். 'ஸ'வுக்குப் பதிலாக 'ச'வும் இடம் பெறலாம். வஸந்தம் என்பதை வசந்தம் என எழுதலாம்.

'ஜ'க்குப் பதிலாக 'ச்' இடம் பெறலாம்.

| | | |
|---|---|---|
| பூஜ்யம் | — | பூச்சியம் |
| ஜாக்ரதை | — | சாக்கிரதை |
| ஜனகன் | — | சனகன் |
| ஜாலம் | — | சாலம் என எழுதப்படலாம். |

க்ஷ என்னும் கூட்டெழுத்து வருமிடங்களில் இலட்சு மணன் எனவும் இலக்குமணன் எனவும் 'ட்ச', 'க்க' என்பன இடப்படுகின்றன. பட்சணம் எனவும், பக்கணம் எனவும் எழுதப்படுவதைக் காண்க.

'ஹ' வுக்குப் பதிலாக 'க' இடப்படுகின்றது. ஹிட்லர் என்பதைக் கிட்டிலர் என எழுதுபவர். மொழி முதலில் வரும் ஹகர மெய் தமிழில் எழுதும்போது விடப்படுவதுண்டு.

ஹரி — அரி

ஹரன் — அரன்

ஹிரண்யம் — இரணியம்

இடைநிலை மெய்ம்மயக்க விதிப்படி க ச த ப தம்மொடு தாம் மயங்குமாதலின் பூஜ்யம் என்பதைப் பூச்சியம் என்றே எழுதுதல் வேண்டும்.

**செவ்வைபார்த்தல் 3**

எழுத்துப் பிழை பற்றிய உங்கள் அறிவை மேலும் திடப்படுத்திக் கொள்ளுவதற்காகக் கீழே கொடுக்கப் பட்டுள்ள பயிற்சிக்கு விடை தருக. கீறிட்ட சொற்களில் பிழையிருப்பின் X எனவும், பிழையில்லாதுவிடின் √ எனவும் அடையாளமிடுக.

| சொற்கள் | சரி அல்லது பிழை என அடையாளமிடுக. |
|---|---|
| 1 கழை பறித்தனர். | |
| 2 பொற்கிழி வழங்கினுன். | |
| 3 கிளவி அப்பம் சுட்டாள். | |
| 4 யுத்தகலம். | |
| 5 ஆலமான கிணறு. | |
| 6 தாழி கட்டிய மனைவி. | |
| 7 வலியினுல் துடித்தான். | |
| 8 முற்ரத்தில் நட்டனர். | |
| 9 வாழைமீன் நீளமானது. | |
| 10 குளவி கொட்டியது. | |
| 11 முன்னூறு ரூபா என்பது 300 ரூபா ஆகும். | |
| 12 வலைவீசி மீன் பிடித்தனர். | |
| 13 செட்டி வளையல் விற்ருன். | |
| 14 மணம் இரங்கினுன். | |
| 15 கஷ்ரம் வந்தது. | |
| 16 புஸ்த்தகம் படித்தான். | |
| 17 புஷ்ப்பம் குடினுன். | |
| 18 அது குற்றம் ஆகாது. | |

19 கண்ணனின் தாய் குந்தி ஆவாள்.
20 கன்னன் கொடை வள்ளல்.
21 இருபது நாள்.
22 இராமன் வில்லில் நான் பூட்டினன்.
23 அரம் கொண்டு அராவினன்.
24 அரம் செய விரும்பு.
25 குரிஞ்சி நிலம் மலைநாடு.
26 சந்நியாசி ஒருவர் வந்தார்.
27 மரனிழலில் தங்கினர்.
28 குளத்திலே மீனுண்டு.
29 வேட்டையாடிக் கொண்றனர்.
30 பறந்த நிலப்பரப்பு.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## பகுதி II

எழுத்தாற்றலில் இடம் பெறும் பிறிதோர் அம்சம் சொல்லிடைவெளி விடுதலாகும். செல்லிடைவெளி சம்பந்தமாகக் கைக்கொள்ளப்படும் விதிகள் பற்றி நாம் இப்பொழுது ஆராய்வோம்.

## 4.0 சொல்லிடைவெளி

பண்டைய நாளில் பனையோலை ஏடுகளில் எழுதியவர்கள் சொல்லிடைவெளிவிடுதல் பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. எவ்வித விதியையும் பின்பற்றுது சொற்களைத் தொடுத்தே எழுதிவந்தனர். ஓலைகளில் இடநெருக்கடியும் அதற்கு முக்கிய காரணம் எனலாம். எழுதுவதும், வாசிப்பதும் நன்கு கற்றறிந்த பண்டிதர்களுக்கு மட்டுமே உரிய செயலாக அன்றிருந்தமையும் பிறிதோர் காரணமாகலாம்.

வாசிப்பதற்கும், பொருளை நன்கு விளங்கிக் கொள்ளுவதற்கும் வசதியாக இப்பொழுது நாம் சொல்லிடைவெளிவிட்டு எழுதுகிறோம். சொல்லிடைவெளி விடுதல் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டிய சில விதிகளை இப்பந்தியிற் கற்போம்.
கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு பந்திகளையும் நோக்குக.

(அ) மகத நாட்டிலே வீரசேனன் என்றொரு மன்னன் ஆட்சி புரிந்துவந்தான். அவனுக்குச் செல்வத்திலாசையதிகம். இரத்தினக்கற்களைச் சேமிப்பதில் அதிக ஆர்வம் காட்டினன். வைரக்கற்களைத் தேடிக்கொண்டுவருமாறு அந்த நாட்டிலுள்ள வணிகர்களைப் பிறநாடுகளுக்கு அனுப்பினன். தன்னுடையதலைநகருக்குவரும் அரசர்களையும்

மகான்களையும் பொக்கிஷசாலைக்குஅழைத்துச் சென்று தான்தேடி வைத்துள்ளவிலையுயர்ந்த அற்புதஇரத்தினக்கற்களைக் காட்டி மகிழ்வான் ஒருநாள்சுமதிநாதர்என்ற ஒருமகான் அரண்மனைக்கு வந்தார்.

(ஆ) அவர் ஓர் ஏழை அந்தணர். தினமும் விளைவயல்களுக்குச் செல்வார். அங்கே வயலில் சிதறிக் கிடக்கும் நெல் மணிகளைப் பொறுக்கிக் கொண்டுவருவார். அதைக் குற்றிமாவாக்கி அந்த மாவைப் பிசைந்து அக்குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் சாப்பிடுவார்கள். ஒருநாட்கூட அவர்கள் வயிறு நிறைய உண்டதில்லை. தினமும் அரை வயிறு, கால்வயிறு நிரம்புவதே கடினம் ஒருநாள் அக்குடும்பத்தினர் உண்ண எதுவும் இன்றிப் பட்டினிகிடந்தனர்.

இவ்விரு பந்திகளுள் உங்களால் இலகுவில் வாசித்து விளங்கக் கூடியதாக இருப்பது ( ஆ ) பந்தியே என்பது தெளிவாகும்.

சொற்களுக்கிடையே இடைவெளி இருப்பதால் ( ஆ ) பந்தியை வாசிப்பதும், விளங்கிக் கொள்ளுவதும் இலகுவாக இருக்கின்றது. ‘ அ ’ பந்தியில் இடைவெளியின்றிப் பல சொற்கள் சேர்த்து எழுதப்பட்டிருப்பதால் அப்பந்தியில் வந்துள்ள தொடர்களை வாசிப்பதும் பொருளை விளங்கிக் கொள்வதும் சிறிது கடினமாக இருக்கின்றது.

சில சொற்களைச் சேர்த்து எழுதுகின்றோம். சில சொற்களைப் பிரித்து எழுதுகின்றோம். ஆதலின் எவற்றைச் சேர்த்து எழுத வேண்டும்? எவற்றைப் பிரித்து எழுத வேண்டும்? என அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். பிரித்து அல்லது சேர்த்து எழுதவேண்டிய சொற்கள் பற்றி இன்று கைக்கொள்ளப்படும் விதிமுறைகள் சிலவற்றினை அறிந்து கொள்வோம்.

**பிரித்து எழுதவேண்டிய சொற்கள்**

- விகாரமடையாது இயல்பு புணர்ச்சியாக வரும்போது சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து எழுதுதல் வேண்டும்.

உ – ம் : பசுவுக்கு வைக்கோல் போட்டான்.
அவன் சிறை செய்தான்

பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் இவ்வாறு எழுதலாம்.

- அன்றி, மேலும், பின்பு, அதனுல் என்பன போல வரும் இடைச் சொற்களும் பிரித்து எழுதப்பட வேண்டியனவே.

- மிக நன்று, படு மோசம் என்பது போல அடை மொழிகளாக வரும் உரிச்சொற்களையும் பிரித்து எழுதலாம். மிகநன்று எனச் சேர்த்து எழுதுவது முண்டு.

- அடைமொழிகளையும் பிரித்து எழுதலாம்.

பெயரடைகள் : பதிந்த கூரை, நல்ல வீடு, இளங் கன்று

வினையடைகள் : அழுகிக் கிடந்தது, விரும்பிச் சென்றான், நொந்து வருந்தினான்.

- சில துணைவினைகளைப் பிரித்து எழுதலாம்.

உ—ம் : பெற்றுக் கொண்டான், வணங்கி நின்றான், செய்து விட்டான்

- சில எதிர்மறை வினைகளையும் பிரித்து எழுதலாம்.

முயன்றான் அல்லன்
செல்வான் அல்லன்

**சேர்த்து எழுத வேண்டிய சொற்கள்**

- உபசர்க்கங்கள்:
உதாரணம்: நிர்க்குணம், துர்க்குணம், உபநயனம்

- எதிர்மறைப் பொருள் தரும் வடமொழி முன்னடைகள்

உதாரணம்: அசுத்தம், அவமானம், பிரிதிகூலம்

- சொற்பின்னடைகள்;
கவிமணி, புலவர்மணி

- வேற்றுமை உருபுகள்
மரத்தை, வாளால், ஊருக்கு, அவனுடைய

- எண்ணுப் பொருளில் ஆவது, ஆம் என முடிபவை
ஐந்தாவது, மூன்றாவது
ஐந்தாம், மூன்றாம்

- எதிர்மறைவினைகள்:
வந்திலன், வாரான், கொல்லவில்லை

- மரியாதைப் பதங்களாகப் பெயர்களையடுத்து வருபவை மந்திரியவர்கள், குருநாதர், சுவாமிஜீ.

- காரன், காரி, போன்ற ஈறுகொண்ட பெயர்கள் கமக்காரன், பணக்காரர், கோபக்காரன் கோபக் காரி, பணக்காரி, பிச்சைக்காரி

- இரட்டைக்கிளவிகள்: ஓடியோடி, ஆடியாடி, சுறு சுறுப்பாக

- தனிப்பட்டவர்கள் பெயர்களும், இடப்பெயர்க ளும் வரகுணபாண்டியன், விஜயமார்த்தாண்ட தேவர், அறிவுடைநம்பி பருத்தித்துறை, காரை நகர் காவிரிப்பூம்பட்டினம்.

சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவது பற்றி, வேறுபட்ட கருத்துக்கள் எழுத்தாளரிடையே நிலவு வதைக் காணலாம். பொருளைத் தெளிவாகப் புலப் படுத்துவதே மொழியின் நோக்கம் ஆதலின் பொருள் வேறுபாடேற்படாதவிடத்துப் பிரித்தோ அல்லது சேர்த்தோ எழுதுவதால் தவறு ஏற்படமாட்டாது.

- அவன் ஓர் அறிவுள்ள மனிதன்
- அவன் ஓரறிவுள்ள மனிதன்

புணர்த்தி எழுதியமையால் பொருள் வேறுபாடு ஏற் பட்டிருப்பதை அவதானிக்க.

**செயற்பாடு 1**

சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதுவதுபற்றி நீங்கள் பெற்ற அறிவை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள பந் தியில் வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

நள்ளிரவாயிற்று, காவலரக்கியர் கண்ணயர்ந்தனர். சீதா பிராட்டிக்குத் துணையாகவிருந்த திரிசடை ஒரு கனவு கண்டாள். அக்கனவின்படி இராவணனுக்கழிவு கிட்டிவிட்டது எனப்பிராட்டிக்குக் கூறினாள். பிராட்டி யைக் கண்டமையால் மகிழ்ச்சியுற்றிருந்த அநுமன் செவிகளில் வாத்திய ஒலிகள் கேட்டன. விளக்குகள் ஒளிவீசின. பல சிகரங்களையுடைய மலை போல் இராவ ணன் தோன்றினான். மலையிலிருந்தருவிபாய்வது போல் அவனணிந்திருந்த உத்தரியங்கள் விளங்கின. நிலமதிர நடந்து பிராட்டியிருந்தவிடம் நோக்கி நடந்து வந்தான் விளக்கேந்திய மகளிரும் வாத்தியக்காரருமவனைச்சூழ்ந்து வந்தனர். வருபவன் இராவணனேயெனவுணர்ந்த அநு மன் ஒரு மரக்கிளையில் மறைந்திருந்தான்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

எழுத்துப்பிழைகள், சொல்லிடைவெளிகள் என்பன பற்றி முன்னைய இரு பகுதிகளிலும் கற்றோம். மொழியைத் திருத்தமாக உபயோகிக்கும்போது நிறுத்தக் குறிகள் பற்றிய அறிவும் இன்றியமையாததாகும். ஆதலின் நிறுத்தக் குறிகள் பற்றியும் அவை இடப்படவேண்டிய இடங்கள் பற்றியும் இந்தப் பகுதியில் தெரிந்து கொள்வோம்.

## 5.0 நிறுத்தக் குறிகள்

பேசும்போது எமது கருத்தினை முன்னிலையில் இருப்போர் புரிந்து கொள்ளுவது இலகு. அவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளுவதற்காகவும், உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காகவும் நாம் சொற்களை எடுத்தும், படுத்தும் உச்சரிப்போம். அபிநயத்தையும், முகபாவத்தையும் துணைக் கொண்டும் விடயத்தைப் புரிந்துகொள்ளச் செய்வோம். ஆனால் எழுதும்போது எடுத்தல் படுத்தலோ, அபிநயமோ, முகபாவமோ இடம்பெற வாய்ப்பில்லை. ஆயினும் அவை புலப்படுத்தக் கூடிய செய்திகளை எழுதும்போது நாம் உபயோகிக்கும் நிறுத்தக் குறிகள் தெளிவாகப் புலப்படுத்தி விடுகின்றன. ஆதலின் உரிய இடத்தில் உரிய குறியீட்டினை இடுவதற்கு நாம் பயின்று கொள்ளவேண்டியது அவசியமாகும். வாசிக்கும்போது எத்தனை மாத்திரை நிறுத்தி வாசிக்க வேண்டும் என்பதை இக் குறியீடுகள் புலப்படுத்துகின்றன. அதனாலேயே இவை நிறுத்தக் குறிகள் அல்லது தரிப்புக்குறிகள் என அழைக்கப்படுகின்றன.

எதிரிக்கு விடுதலை என்ற தொடர் ஒரு செய்தித்தாளில் இடம் பெறுகின்றதென வைத்துக்கொள்வோம். அதற்குப் பொருத்தமான குறியீடு இடப்படாவிட்டால் அத்தொடர் புலப்படுத்தும் கருத்தினை நாம் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது. ''எதிரிக்கு விடுதலை'' என மேற்கோள் குறியீட்டுடன் எழுதியிருந்தால் எதிரி விடுதலையாகி விட்டான் என எண்ணலாம். ''எதிரிக்கு விடுதலை''? என வினாக்குறி இடப்பட்டிருப்பின் எதிரி விடுதலையாகிவிடுவானா என்றதோர் ஐயம் எழும். ''எதிரிக்கு விடுதலை!'' என ஆச்சரியக்குறி இடப்பட்டிருந்தால் எதிரி விடுதலையாவது புதுமைக்குரிய அல்லது திகிலுக்குரிய அல்லது மகிழ்ச்சிக்குரிய தோர் செய்தி என்பதை அக்குறியீடு புலப்படுத்தும்.

நிறுத்தக் குறிகள் இன்றி எழுதப்பட்ட ஒரு பந்தியில் எழுதியவர் புலப்படுத்த எண்ணிய கருத்தை வாசிப்பவர் பூரணமாக விளங்கிக் கொள்வது கஷ்டமாகும். ஆதலின், எழுதும்போது தேவையான குறியீடுகளைப் பொருத்தமான இடங்களில் இட நாம் பயின்று கொள்ளவேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை நன்கு அவதானிக்க.

1 அன்பேநீ என்னை மறந்ததேனோ

2 அன்பே, நீ என்னை மறந்ததேனோ?

3 அவனைப் பிடித்துக்கட்டி ஜீப்பில் ஏற்றிவந்து சிறையிலிட்டனர்.

4 அவனைப் பிடித்துக் கட்டி, ஜீப்பில் ஏற்றிவந்து சிறையிலிட்டனர்.

முதலாம், மூன்றும் வாக்கியங்கள் குறியீட்டின்மையால் கருத்தினை அவை தெளிவாகப் புலப்படுத்தவில்லை. இரண்டாம், நான்காம் வாக்கியங்களில்இடப்பட்டுள்ள குறியீடுகள் பொருளைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

**பல்வேறு வகையான நிறுத்தக் குறிகள்**

. , ; :

? ! —

" ——— " ( )

. முற்றுப்புள்ளி
, காற்புள்ளி
; அரைப்புள்ளி அல்லது தொடர்பிசைக்குறி
: முக்காற்புள்ளி அல்லது விளக்கக்குறி
? வினுக்குறி
! வியப்புக்குறி
- இடைக்கோட்டுக்குறி
"-" மேற்கோட்குறி
( ) அடைப்புக்குறி

**முற்றுப் புள்ளி ( . )**

வாசிக்கும்போது இப்புள்ளி வாக்கிய முடிவில் வரின் நான்கு மாத்திரை தரிக்க வேண்டும் என்பர்.

- வாக்கிய முடிவில்

  நான் பாடம் படித்தேன்.
  குதிரை வேகமாக ஓடியது.

● சொற்களைச் சுருக்கி எழுதும் இடங்களில்

பொன்னம்பலம் இராமநாதன் —
பொன். இராமநாதன்

முற்பகல் — மு. ப.

கிறிஸ்துவுக்கு முன் — கி. மு.

இலங்கை போக்குவரத்துச் சபை—இ. போ. ச.

● முகவரி ஈற்றில் :

'மலர்மனை'

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

**காற்புள்ளி ( , )**

காற்புள்ளி இடம்பெறும் இடங்கள் பலவாகும். அவற்றுள் பிரதானமான இடங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வாசிக்கும்போது இவ்வடையாளமுள்ள இடங்களில் ஒரு மாத்திரை நிறுத்தி வாசித்தல் வேண்டும்.

● விளிக்கும் இடங்கள்

அன்ப,

குழந்தாய்,

பேரன்புடைவீர்,

● பல செயல்களைத் தொடர்ந்து கூறுதல்

அவ்வாறு அமையும் வாக்கியங்களில் ஏனைய செயல்கள் வினையெச்சங்களாக அமைய, ஈற்றில் வினைமுற்று இடம்பெறும். அவ்வினையெச்சங்கள் காற்புள்ளி பெறும்.

அவன் காலையில் எழுந்து, பல்துலக்கி, ஸ்நானம் செய்து, உணவுண்டு, உடையணிந்து பாடசாலைக்குப் புறப்பட்டான்.

கறுத்து, மின்னி, முழங்கிப், பலமான காற்றுடன் மழை பெய்யத் தொடங்கியது.

● பல பெயர்கள் அடுக்கி வரும்போது

நிலம், நீர், தீ, காற்று, வளி எனப் பூதங்கள் ஐந்து.

இறுதிச் சொல்லாகிய வளி காற்புள்ளி பெறுமையை அவதானிக்க.

● கடித முகவரியில்
முகவரி எழுதும்போது ஈற்றில் வரும் பெயர் முற்றுப்புள்ளி பெறும். ஏனைய இடங்களிற் காற்புள்ளி இடம் பெறும்.

சி. பொன்னையா,
''கடம்பவனம்'',
கட்டுவன்,
தெல்லிப்பளை.

அரைப்புள்ளி அல்லது தொடர்பிசைக்குறி (;)

ஒரு எழுவாய் பல முற்றுவினைகள் கொண்டு முடியும் தொடர் வாக்கியங்களில்வினைமுற்றை அடுத்து இக்குறியீடு இடப்படுகின்றது. வாசிக்கும்போது இக்குறியீடுள்ள இடங்களில் இரண்டு மாத்திரை நேரம் தரித்தல் வேண்டும்.

● நான் கடைக்குச் சென்றேன்; ஐந்து ரூபா கொடுத்தேன்; ஒரு பந்து வாங்கினேன்.

● அவள், மகனது அழகை நினைந்து உருகினாள்; தன் மீது அவன் சொரிந்த அன்பை நினைந்து கலங்கினாள். அவனது திறமைகளை நினைந்து விம்மினாள்; செய்வதறியாது திகைத்தேங்கினாள்.

● அவன், விடாமுயற்சியுடையவன்; வகுப்பிலும் முதல் மாணவனாக விளங்கினான்; விளையாட்டுக்களிலும் பல பரிசில்கள் பெற்றான்.

முக்காற் புள்ளி அல்லது விளக்கக்குறி (:)

வாசிக்கும்போது இக்குறியீடுகள் இடத்தில் மூன்று மாத்திரை நேரம் தரித்தல் வேண்டும்.

● ஒன்றினை விளக்க வேண்டிய இடத்தில் இக்குறி பயன்படும். பஞ்சபூதங்களாவன: நிலம், நீர் தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்துமாம்.

அறுவகைப் பெயர்களாவன: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் குறித்து வருவன.

● சம்பாஷணை போன்றவற்றிலும் இக்குறியீடு இடம் பெறும்.

சீடன் : சுவாமி, தாங்கள் எப்பொழுது புறப்பட உத்தேசித்துள்ளீர்கள்?

குரு : இன்றுமாலை, கொண்டு செல்லவேண்டியவற்றைக் கவனமாகப் பெட்டியில் எடுத்து வை.

சீடன்: அப்படியே செய்கிறேன் சுவாமி.

## வினாக்குறி (?)

- வினா வாக்கியத்தின் இறுதியில் இவ்வடையாளம் இடம்பெறும். வைத்தியசாலையிலிருந்து உனது மனைவி இன்னும் வீட்டுக்கு வரவில்லையா?

  இவ்வளவு திறமையுள்ள மாணவனா பரீட்சையில் சித்தியடையவில்லை?

## வியப்புக்குறி (!)

- ஆச்சரியத்தைப் புலப்படுத்தும்போது

  இறைவனின் திருவருள் இருந்தவாறென்னே!

  ஆகா! கூலியைக் கூட்டித்தரச் சம்மதித்து விட்டாரா?

- அவலத்தை அல்லது சோகத்தைப் புலப்படுத்தும் போது

  ஐயோ! அப்பாலகன் இறந்து விட்டான்.
  அந்தோ! இக்கொடுமையைக் கேட்பாரில்லையா?!

- மகிழ்ச்சியைப் புலப்படுத்தும்போது
  ஆகா! அற்புத சிருஷ்டி!
  உனது கைவண்ணமே கைவண்ணம்!

- வாழ்த்தும்போது
  ''நீ நீடு வாழ்க''! என்று வாழ்த்தினர்.
  வாழிய! வாழிய! வாழியவே! என வாழ்த்தி நின்றனர்.

## மேற்கோட்குறி (''__________'')

- தன் கூற்று வாக்கியங்களை வேறாகப் புலப்படுத்தும்போது,

  ''எசமானே, என்னைத் தண்டிக்காது மன்னியுங்கள்'' என வேண்டி நின்றான் அவ்வேலைக்காரன்.

  ''இந்தப்படத்துக்கா இருநூறு ரூபாய்'' என்று கோபத்துடன் அவள் கேட்டாள்.

- இலக்கியச் செய்யுளடிகள் மேற்கோளாக எடுத்தாளப்படும் போதும், பழமொழிகள், நீதி வாக்கியங்களைக் குறிப்பிடும் போதும்,

  'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்'' என்று கூறி அநுமன் பணிந்தான்.

  ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என இராமன் கூறினான்.

- விசேட பொருள் தரும் தனிச் சொல்லேயும் இக் இக்குறியீட்டினுள் இடலாம்.

''சால்பு'' என்பது, பண்பாடு, மேன்மை, ஊக்கம் மாட்சிமை, கல்வி என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சொல்லாகும். அஞ்சனேயின் மகனுதலின் அநுமன் ''ஆஞ்சநேயன்'' எனப்பட்டான்.

- மேற்கோட் குறியுள், ஒற்றை மேற்கோட்குறியும் ('———') இடம் பெறும்.

''நான் புறப்படும்போது அப்பா என்னேப்பார்த்து 'புகைவண்டியில் திருடர் பயம் அதிகம்; கவனமாகப் போய்வா' என்று கூறி அனுப்பிவைத்தார் எனப் பாஸ்கரன் கூறினுன்.

**இடைக்கோட்டுக்குறி ( — )**

இதனே விட்டிசைக்குறி எனவும் கூறுவர்.

- இதிலிருந்து இதுவரை எனக் காலம், இடம், எண் என்பன குறிக்கப் பயன்படும்.

சுபவேளே : பி. ப 3.00 மணி — பி. ப. 4.30 மணி கொழும்பு - கண்டி : 72 மைல்

1 – 100 வரை எழுதுக.

- கூறியவர்களின் பெயர்களேக் குறிப்பிடும்போது

''ஆறுவது சினம்''

– ஔவையார் –

''ஒரு துளி நீரும் மக்களுக்குப் பயன்படாது கடலிற் சென்று விழுதலாகாது''

– மகா பராக்கிரமாகு –

- வாக்கியங்களில் சில விளக்கங்கள் கொடுக்க நேரும் போது:

அறுபது வயது முடிவில் அரச ஊழியர் யாவரும்– அரச கூட்டுத்தாபன ஊழியர் உட்பட – ஓய்வு பெறுதல் வேண்டும்.

இந்துக் கோவிலில் வழிபாடாற்றச் செல்வோர் அனேவரும் – பெண்கள், குழந்தைகள் நீங்கலாக – சட்டை அணிந்து செல்லுதல் ஆகாது.

- சொற்களேச் சுருக்கி எழுதும்போது

உதாரணம் : உ – ம் ஆசிரியர் : ஆ – ர்
பதவுரை : ப – ரை

அடைப்புக்குறி : ( )

- மாற்றுப் பெயர் குறிப்பிடும்போது :
  ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் (கண்ணுச்சாமி), கண்டியை ஆண்ட கடைசி மன்னனுவான்.

- காலம் குறிப்பிடும்போது :
  ஆதி சங்கரர் (கி. பி. 788 - 820) மலையாளத்தி லுள்ள காலடியிற் பிறந்தார்.

- ஏதாவது ஒரு சொல்லின் அல்லது தொடரின் பொருளைப் புலப்படுத்தும்போது அல்லது வேறு விளக்கம் கொடுக்கும்போது :

  எந்தக் கருமத்தையும் திரிகரண (மனம், வாக்கு, காய) சுத்தியுடன் செய்தல் வேண்டும்.

  இந்தப் பணம் உங்கள் கணக்கில் (வங்கியில் உள்ள முன்னிருப்புடன்) வரவு வைக்கப்பட்டுள்ளது.

**செயற்பாடு 2**

இச் செயற்பாட்டிற் கொடுக்கப்பட்டுள்ள அப்பியாசங்கள் குறியீடு இடுதல் பற்றிய உங்கள் அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளத் துணைபுரியும்.

கீழே இரண்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. உரிய குறியீடுகளை வேண்டிய இடங்களில் இடுக.

1 சோழன்: என்ன அவமானம் எனது மகள் அமராவதியையா கம்பர் மகன் அம்பிகாபதி காதலிக்கிருன் இதைக் கேட்டதும் என் நெஞ்சு துடிக்கிறதே அவமானத்தால் தலை தாழ்கிறதே மனம் எண்ணுததெல்லாம் எண்ணுகின்றதே நான் என்ன செய்வேன்

கூத்தர்: மன்னர் மன்னு அமைதி அமைதி பொறுமையாய் இருங்கள் அவர்கள் காதலை முடியடிக்க நான் உபாயங் கூறுகின்றேன் சிறிது யோசித்து தாடியை உருளியபடி அரசே காதல் கலக்காது அம்பிகாபதியை நூறு பாடல் பாடச் சொல்லுங்கள் அவ்வாறு பாடிவிட்டால் அமராவதியை அவனுக்கே கொடுத்து விடுவதாகக் கூறுங்கள் காதல் மயக்கத்தில் இருக்கும் அவனுல் அவ்வாறு நூறு பாடல்கள் தொடர்ந்து பாடமுடியாது போய்விடும் வெற்றி நமக்கே

2 சுந்தரிப்பாட்டி சுந்தரிப்பாட்டி இதைப்பார் பிள்ளையாரே பிள்ளையாரே என்னையும் ஒரு பணக்காரன் ஆக்கிப் போடும் என்று நான் ஒவ்வொரு நாளும் வேண்டுதல் செய்வேன் அதுதான் பிள்ளையார் எனக்கு இந்த நகை முடிப்பைத் தந்திருக்

கிரூர் முற்றத்து வேப்பமரத்தடியிலே இது கிடந்தது என்றூர் முருகப்பர் நீ பெரிய அந்தரப் புளுகனடா அது காமாட்சி தந்த நகை நான் மறந்து போய் அதிலே வைத்துவிட்டு வந்துவிட்டேன். ஐயையோ! வேறே யாரேனும் எடுத்திருந்தால் என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கிஞள், சுந்தரிப்பாட்டி.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

**செவ்வைபார்த்தல் 4**

பல்வேறு வகையான நிறுத்தக் குறிகள் பற்றியும் அவை இடப்படவேண்டிய இடங்கள் பற்றியும் நீங்கள் விரிவாக அறிந்து கொண்டீர்கள். நீங்கள் பெற்ற அறிவை இங்கு கொடுக்கப்பட்டுள்ள செவ்வைபார்த்தல் பயிற்சி மூலம் மேலும் வலுப்படுத்திக் கொள்க கோடிட்ட இடங்களில், இடப்படவேண்டிய குறியீடுகளை இடுக.

1. இலங்கையில் வாழும் இனத்தவர்கள் ............ தமிழர், சிங்களவர், சோனகர், பறங்கியர்.

2. அலுவலக நேரம்: காலை 8.00 மணி............ மாலை 4.15 மணி.

3. ............ வெண்பாவிற் புகழேந்தி ............ எனப் பாராட்டப்பட்டவர் ஆவர்.

4. ............ விற்போரில் என்னை எதிர்க்க வல்லவர்களும் உண்டோ எனக் கன்னன் சீறியுரைத்தான்.

5. கலிங்கப்போர், முதலாம் குலோத்துங்கன் காலத்தில்...... கி. பி 1078 – 1118 ......... நடைபெற்றது

6. ஆகா...... கதிரை மலைப்பள்ளின் கற்பனை வளந்தான் என்னே ............

7. இரகுநாதன் ............ அழகன் ............ அறிஞன் ............ கலைஞன் ............

8. மணி, ............ உன் உடம்பு கடின வேலைகளைத் தாங்காது ............ என எனது தாயார் கூறியதையும் பொருட்படுத்தாது நான் படையிற் சேர வந்துள்ளேன் ............ என அவன் கூறிஞன்.

9. அந்தோ!...... இனக்கலவரம்...... எனது இரு புதல்வர்களைப் பலிகொண்டு விட்டதே!............

10. செய்யுளைப் பொருளமைதிக்கு ஏற்ப மாற்றி எழுதுதல்...... கொண்டுகூட்டு...... எனப்படும்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 6.0 பொழிப்பு

எழுத்துப்பிழையின்றி எழுதுதல், சொல்லிடைவெளி விடுதல், நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான இடங்களில் இடுதல் போன்ற ஆற்றல்கள் பயன்படுத்தும் போது மிக இன்றியமையாதன.

எழுத்துப் பிழைகளில் ணகர னகர பேதம், ரகர றகரபேதம், லகர ளகர ழகரபேதம் என்பனவே அதிகம் இடம்பெறுகின்றன. உச்சரிப்புத் தவறே இவ்வெழுத்துப்பிழைகளுக்குக் காரணமாதலின், சரியாக உச்சரிக்கவும், தவறின்றி எழுதவும், பொருள் வேறுபாடறியவும் பயின்று கொள்க.

பிரித்தும். சேர்த்தும் எழுதப்படவேண்டிய சொற்கள் எவை என அறிந்து சொல்லிடைவெளி விடவும் பயிலுதல் வேண்டும்.

தெளிவான கருத்தைப் புலப்படுத்தும் ஆற்றல் நிறுத்தக் குறியீடுகளுக்குண்டு. பொருத்தமான இடங்களில் பொருத்தமான குறியீடுகளை இடவும் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

நாம் சிந்திக்காமலே எமது கை, பிழையின்றி எழுத, இடைவெளி விட, குறியீடு இடக்கூடியதாக எமது பயிற்சியை வளர்த்தல் வேண்டும்.

இந்தத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு முறையான இலக்கணப்பயிற்சிகளோடு கூடிய நூல்கள் துணைபுரியும்.

## 7.0 பிற்சோதனை

1 கீழே கொடுக்கப்பட்ட பந்தியில் எழுத்துப் பிழைகள் பல இடம் பெற்றுள்ளன. பிழையின்றி அப் பந்தியைத் திரும்ப எழுதுக.

> குற்ரவாளியைத் தேடிக்கொண்டு சென்ற நகர் காவளர் மளைபெய்து தன்னீர் தேங்கி நின்ற குளிகளில் வீள்ந்து இடர்ப்பட்டனர். நம்மிர வுவரை தேடியும் அவனைக் கய்து செய்ய முடியவில்லை. நனைந்து தோய்ந்து போன கால்ச் சட்டையுடன் நடக்கவும் முடியாது கஷ்ட்டப் பட்டனர். மேலும் காலம் தாள்த்தாது காவல் நிளயத்துக்கு மீன்டணர்.

2 கீழே தந்துள்ள பந்திகளைச் சொல்லிடைவெளி விட்டெழுதுக. உரிய நிறுத்தக் குறிகளையும் வேண்டிய இடங்களில் இடுக.

அ. புயலும்பேய்மழையும்சுழல்காற்றும் நம்நாட்டுக்குப் புதியவையல்ல புயலுக்குஆங்கிலத்தில் சைக்ளோன் என்றுபெயர் இந்தச் சொல்லுக் கிரேக்கமொழியில் பாம்புச்சுருள் என்பது பொருள்.

ஆ. சாருதத்தன் வசந்தசேனை கொட்டும்மழையில் நள்ளிரவில் நீ என்னைத் தேடிவந்துவிட்டாய் உன்காதலின் தூய்மையை உணர்த்திவிட்டாய் இவ்வாறு நீ புறப்பட்டுவரலாமா வசந்ததேனை பெருமானே அந்தோ உங்களுக்குநேர்ந்த கொடுமையை அறிந்து நான்பட்டவேதனை அப்பப்பா சொல்லவே மனம் நடுங்குகிறது. வசந்தசேனைக்குச் சொல்ல வேண்டாம் என்றும் கட்டளையிட்டீர்களாமே.

இ. சிறையிலிருந்த நண்பன் என்னைக் கண்டதும் ஆனந்தம் கொண்டான் மனம்திறந்துபேச முயன்றான் நான்நிரபராதி என்று விம்மினான்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

ஈ. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பதிப்பித்த நூல்கள் பல. அவ்வாறு பணியாற்றியிராவிடின் அரியபல தமிழ்நூல்களை நாம் இழந்திருப்போம் எனப்பேராசிரியர் தமது பாராட்டுரையிற் கூறினர்.

## 8.0 ஒப்படை

1 (அ) பின்வரும் பந்திகளை எழுத்துப்பிழை நீக்கி மீட்டெழுதுக:

முச்சங்கம் கன்டது எங்கள் தமிள். அது இயல் உடையது; இசயுடையது; இனிய கூத்துடயது அப்பெறுமையை இன்று நாமடைய அன்று அவற்றை ஆக்கி அழித்த புலவர் பெரு மக்கலே காரனராவர். அவர்கள் தம் வயிர்ரு வாள்விற்காக மட்டும் அலைந்திருப்பரேல் இன்று அத்தகைய தமிழ் நூல்கள் எமக்குக் கிடைத்திரா.

(ஆ) இந்த இருபதாம் நூர்ராண்டில் இரண்டு மகா யுத்தங்கள் நடந்து விட்டன. ஆயினும் நாடுகள் அதிலிருந்து சமாதாணமே தேவை என்பதை அறியவில்லை. யுத்தங்கள் புகழ்த்திய பாடங்களை உலகம் மறந்து விட்டது. அளிவுக்குரிய பயங்கரமான ஆயுதங்களைச் செய்து குவித்துக் கொண்டிருக்கின்றது.

(இ) தமிள்ச் சிறுகதைத் எளுத்தாளர்களில் புதுமைப் பித்தன் தனிசிரந்து விழங்கினர். அவர் கையண்ட மொளிநடை தனித்தன்மை வாய்ந்தது சாதாரண சொற்களை வைத்தே தமது விசித்திற கற்பனைகளை எல்லாம் புளப்படுத்தி விடுவார். மொளி அவருக்கு நெலிந்து வலைந்து கொடுத்தது.

2 கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்திகளைச் சொல்லிடை வெளி விட்டுத் திருப்பி எழுதுக.

(அ) இராவணனின் மைந்தன்மேகநாதன். வில்லின் செல்வன்எனக் கம்பரால் போற்றப்பட்டவன். இலக்குவனுடன் கடுஞ்சமர் புரிந்து யுத்த களத்தையே கலக்கி நின்றவன். சீதையைச் சிறைவிட்டு உய்தியடையும் வண்ணம் தந்தையை வேண்டிநின்றவன். தங்கள் தோல்விகளுக்கெல்லாம் அரக்கரின் மாயையை நன்கறிந்த தனது சிறிய தந்தை விபீடணன் இராமன் பக்கத்தில் இருப்பதே காரணம் என உணர்ந்து மனம் புழுங்கினுன்,

(ஆ) ஒருவன் ஒரு பாயைச் சுருட்டிக்கக்கத்தில் வைத்துக்கொண்டு தெருத்கூத்துப் பார்க்கப் போனுன். கூத்துத் தொடங்குவதற்குச் சிறிது நேரமாகும் என அறிந்தான். பக்கத்தில் நின்ற மரத்தடியில் பாயைவிரித்துப்படுத்தான். நித்திரையாய்விட்டான். எழுந்து பார்த்த போது கூத்து முடிந்துவிட்டது. பாயைச்சுருட்டிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு வீட்டுக்குப்போனுன்.

3 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ேண்டிய குறியீடுகள் இட்டு எழுதுக.

(அ) தசரதன் அயோத்தில் அரசுபுரிந்தமாமன்னன். அவன் கோசலை, சுமித்திரை, கைகேயி என்னும் மூன்று மனைவியரை திருமணம் திருமணம் செய்தான். அவன் செய்த யாகத்தின் பயனுக நான்கு புதல்வர்கள் உதித்தனர். அவர்கள் அழகிலும் ஆண்மையிலும், சிறந்தவர்கள். நல்லொழுக்கம் உடையவர் வசிட்டமுனிவரிடம் குருகுலவாசம் செய்து கல்வி கற்றவர்கள். ஒருநாள் அரசசபைக்கு வந்த விசுவாமித்திரர் தசரதனை நோக்கி மன்னு, எனது வேள்வியை அரக்கர் அழிக்கின்றனர். அவர்களைக் கொன்று வேள்வி காக்க இராமனை என்னுடன் அனுப்புவாயாக என்று கூறினர்,

(ஆ) அந்தோ, இறைவா இதுவும் உன்சோதனையா என் ஒரேயொரு மகனையும் பாவிகள் கொன்று

விட்டார்களே அவர்களது அட்டகாசத்துக்கு முடிவேயில்லையா? துரோகக் கும்பலை ஒழித்தே தீருவேன் என்று கூறிச் சென்றாயே மகனே! நீயா பலியாகிவிட்டாய் என்று அத்தாய் புலம்புவதுக்ண்டு அனைவரும் கண்ணீர் உகுத்தனர்.

(இ) வாலி:

இராமன் நீ என்ன கருமம் செய்தாய் சத்தியத்திற்காக உயிரையே விட்ட தசரதன் மைந்தனா நீ அரக்கன் மனைவியைக் கவர்ந்து சென்றால் ஒரு குரங்கைக் கொல் என்று நீ கற்ற தர்மசாஸ்திரம் கூறுகின்றது.

இராமன்:

தர்மம் எனக்கு உபதேசிக்கும் நீ யாது செய்தாய் உன் தம்பியின் மனைவியைக் கவர்ந்தாய் ஒரு தீங்கும் செய்யாத அவனையும் கொல்லத் துணிந்தாய் இவை நியாயந்தானா.

## 9.0 விடைகள்

**முற்சோதனை**

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1) 1 | கைமாறு | — கைம்மாறு |
| 2 | இரபவருக்கு | — இரப்பவருக்குப் |
| 3 | வளங்கியவர்கள் | — வழங்கியவர்கள் |
| 4 | எண்று | — என்று |
| 5 | போற்ரப்படுகின்றனர் | — போற்றப்படுகின்றனர் |
| 6 | அத்தசய | — அத்தனகய |
| 7 | வரிசையிலெ | — வரிசையிலே |
| 8 | எண்ணும் | — என்னும் |
| 6 | குறுநிள | — குறுநில |
| 10 | பெருகின்றான் | — பெறுகின்றான் |

2) இ

**செவ்வைபார்த்தல் 1**

| | | | |
|---|---|---|---|
| 1 | கணை | 8 | கனம் |
| 2 | கனைத்தது | 9 | உண்ணி |
| 3 | கணித்தார் | 10 | உன்னினான் |
| 4 | கனி | 11 | கானில் |
| 5 | மனம் | 12 | காணில் |
| 6 | மணம் | 13 | மண் |
| 7 | கணம் | 14 | மன்னும் |

| | | | |
|---|---|---|---|
| 15 | எண்ணிய | 18 | புணர்ச்சியில் |
| 16 | மானி | 19 | விண்ணவர் |
| 17 | கானலை | 20 | கன்னன் |

**செவ்வைபார்த்தல் 2**

| | | | |
|---|---|---|---|
| 1 | அரம் | 6 | பறந்து |
| 2 | அரிந்தான் | 7 | முருக்கு |
| 3 | இரங்கினான் | 8 | முறுக்கு |
| 4 | இறங்கியது | 9 | கறந்தாள் |
| 5 | பரந்து | 10 | கரந்து |

**செவ்வைபார்த்தல் 3**

| | | | |
|---|---|---|---|
| 1 | × | 16 | × |
| 2 | √ | 17 | × |
| 3 | × | 18 | √ |
| 4 | × | 19 | × |
| 5 | × | 20 | √ |
| 6 | × | 21 | √ |
| 7 | √ | 22 | × |
| 8 | × | 23 | √ |
| 9 | × | 24 | × |
| 10 | √ | 25 | × |
| 11 | × | 26 | √ |
| 12 | × | 27 | × |
| 13 | √ | 28 | √ |
| 14 | × | 29 | × |
| 15 | × | 30 | × |

**செயற்பாடு 1**

நள்ளிரவு ஆயிற்று. காவல் அரக்கியர் கண் அயர்ந்தனர். சீதா பிராட்டிக்குத் துணையாக இருந்த திரிசடை ஒரு கனவு கண்டாள். அக்கனவின்படி இராவணனுக்கு அழிவு கிட்டி விட்டது எனப் பிராட்டிக்குக் கூறினாள். பிராட்டியைக் கண்டமையால் மகிழ்ச்சி உற்றிருந்த அநுமன் செவிகளில் வாத்திய ஒலிகள் கேட்டன. விளக்குகள் ஒளி வீசின. பல சிகரங்களை உடைய மலை போல் இராவணன் தோன்றினான். மலையில் இருந்து அருவி பாய்வது போல் அவன் அணிந்திருந்த உத்தரியங்கள் விளங்கின. நிலம் அதிர நடந்து பிராட்டி இருந்த இடம் நோக்கி நடந்து வந்தான். விளக்கு ஏந்திய மகளிரும், வாத்தியக்காரரும் அவனைச் சூழ்ந்து வந்தனர். வருபவன் இராவணனே என உணர்ந்த அநுமான் ஒரு மரக்கிளையில் மறைந்து இருந்தான்.

**செயற்பாடு 2**

1 சோழன் :

என்ன அவமானம்! என்மகள் அமராவதியையா, கம்பர் மகன் அம்பிகாபதி காதலிக்கிறான்? இதைக் கேட்டதும், என் நெஞ்சு துடிக்கிறதே! தலை தாழ் கிறதே! மனம் எண்ணாததெல்லாம் எண்ணுகிறதே! நான் என்ன செய்வேன்?

கூத்தர் :

மன்னர் மன்னா, அமைதி! பொறுமையாய் இருங்கள். அவர்கள் காதலை முறியடிக்க நான் உபாயம் கூறுகிறேன். (சிறிது யோசித்து, தாடியை உருவிய படி) அரசே, காதல் கலக்காது அம்பிகாபதியை நூறு பாடல் பாடச் சொல்லுங்கள்; அவ்வாறு பாடிவிட்டால், அமராவதியை அவனுக்கே கொடுத்து விடுவதாகக் கூறுங்கள். காதல் மயக்கத்திலிருக்கும் அவனால், அவ்வாறு நூறு பாடல்கள் தொடர்ந்து பாடமுடியாது போய்விடும். வெற்றி நமக்கே!

2 ‘‘சுந்தரிப்பாட்டி, சுந்தரிப்பாட்டி, இதைப்பார். ‘பிள்ளையாரே பிள்ளையாரே, என்னையும் ஒரு பணக்காரன் ஆக்கிப்போடும்’ என்று நான் ஒவ்வொருநாளும் வேண்டுதல் செய்வேன். அதுதான் பிள்ளையார் எனக்கு இந்த நகைமுடிப்பைத் தந்திருக்கிறார். முற்றத்து வேப்பமரத்தடியிலே இது கிடந்தது’’ என்றார் முருகப்பர். ‘‘நீ பெரிய அந்தரப்புளுகனடா. அது காமாட்சி தந்த நகை நான் மறந்துபோய் அதிலே வைத்துவிட்டு வந்து விட்டேன். ஐயையோ வேறே யாரேனும் எடுத்திருந்தால்’’? என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள் சுந்தரிப்பாட்டி.

**செவ்வை பார்த்தல் 4**

1 :

2 -

3 ‘‘ ’’

4 ‘‘ ’’

5 ( )

6 ! !

7 , ; ; .

8 ‘‘ , , , ’’

9 ! ’ , !

10 ’ ,

**பிற் சோதனை**

1 குற்றவாளியைத் தேடிக்கொண்டு சென்ற நகர் காவலர், மழைபெய்து தண்ணீர் தேங்கிநின்ற குழிகளில் வீழ்ந்து இடர்ப்பட்டனர். நள்ளிரவு வரை தேடியும் அவனைக் கைது செய்யமுடியவில்லை. நனைந்து தோய்ந்து போன காற்சட்டையுடன், நடக்கவும் முடியாது கஷ்டப்பட்டனர். மேலும் காலம் தாழ்த்தாது காவல் நிலையத்துக்கு மீண்டனர்.

2 (அ) புயலும், பேய்மழையும், சுழல்காற்றும் நம் நாட்டுக்குப் புதியவை அல்ல. புயலுக்கு ஆங்கிலத்தில் 'சைக்குளோன்' என்று பெயர். இந்தச் சொல்லுக்கு (கிரேக்க மொழியில்) 'பாம்புச்சுருள்' என்பது பொருள்.

(ஆ) சாருதத்தன் ; வசந்தசேனை, கொட்டும்மழையில், நள்ளிரவில் நீ என்னைத் தேடி வந்துவிட்டாய்; உன் காதலின் தூய்மையை உணர்த்திவிட்டாய். இவ்வாறு நீ புறப்பட்டு வரலாமா?

வசந்தசேனை : பெருமானே, அந்தோ! உங்களுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்து நான்பட்ட வேதனை .........அப்பப்பா! சொல்லவே மனம் நடுங்குகிறது. 'வசந்தசேனைக்குச் சொல்லவேண்டாம்' என்றும் கட்டளையிட்டீர்களாமே?

(இ) சிறையிலிருந்து நண்பன், என்னைக் கண்டதும் ஆனந்தம் கொண்டான்; மனம் திறந்து பேச முயன்றான்; 'நான் நிரபராதி' என்று விம்மினான்.

(ஈ) ''சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பதிப்பித்த நூல்கள் பல. அவ்வாறு அவர் பணியாற்றி இராவிடின் அரிய பல தமிழ் நூல்களை நாம் இழந்திருப்போம்'. எனப் பேராசிரியர் தமது பாராட்டுரையிற் கூறினர்.

குறிப்பு

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.